# சிகாகோவில் 3 நிறுவனங்களுடன் ஒப்பந்தம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

இப்பயணத்தின் போது, சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில் உலகில் 10 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சிகாகோ நகரில் 4.9.2024 அன்று ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி மற்றும் உலகளாவிய உதவி மையம் (Development & Global Support Centre) மற்றும் உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், உலகின் முன்னணி காலணி மற்றும் விளையாட்டு ஆடைகள் தயாரிப்பு நிறுவனமான நைக்கி மற்றும் உலகின் முன்னணி ஹெல்த்கேர் நிறுவனமான ஆப்டம் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

அதன் தொடர்ச்சியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 5.9.2024 அன்று சிகாகோவில், லிங்கன் எலக்ட்ரிக், விஷய் பிரிஷிஷன் மற்றும் விஸ்டியன் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள்:

**லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனம்**

லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனம் வெல்டிங் பொருட்கள், ஆர்க் வெல்டிங் உபகரணங்கள், வெல்டிங் பாகங்கள், பிளாஸ்மா மற்றும் ஆக்ஸி எரிபொருள் வெட்டும் உபகரணங்கள், ரோபோடிக் வெல்டிங் பொருட்களின் உலகளாவிய உற்பத்தி நிறுவனம் ஆகும். இது பார்ச்சூன் 1000 நிறுவனங்களில் ஒன்றாகும்.

இந்நிறுவனம் வட அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் 160க்கும் மேற்பட்ட நாடுகளையும்

42 உற்பத்தி இடங்களையும் உள்ளடக்கிய உலகளாவிய விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனை அலுவலகங்களின் வலையமைப்பைக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின் ஓஹியோவின் யூக்லிட்டில் அமைந்துள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

**முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 500 கோடி ரூபாய் முதலீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் லிங்கன் எலக்ட்ரிக் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உற்பத்தி மையத்தை விரிவாக்கம் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், லிங்கன் எலக்ட்ரிக் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சிவபாதசுந்தரம் காஜா, முதுநிலை துணைத் தலைவர் கிரெக் டோரியா மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.**

**விஷய் பிரிஷிஷன் நிறுவனம்**

விஷய் பிரிஷிஷன் நிறுவனமானது செமிகண்டக்டர்கள் மற்றும் எலக்ட்ரானிக் பாகங்களின் உற்பத்தி நிறுவனமாகும். இந்நிறுவனம் இஸ்ரேல், ஆசியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா நாடுகளில் உற்பத்தி ஆலைகளைக் கொண்டுள்ளது, அங்கு ரெக்டிஃபையர்கள், டையோட்கள், MOS FETகள், ஆப்டோ எலக்ட்ரானிக்ஸ், மின்தடையங்கள், மின்தேக்கிகள் போன்றவற்றை உற்பத்தி செய்கிறது. இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின், பென்சில்வேனியாவின் மால்வெர்னில் அமைந்துள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

**முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், விஷய் பிரிஷிஷன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 100 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரத்தில் சென்சார்ஸ் மற்றும் டிரான்ஸ்டியூசர்ஸ் (Sensors and Transducers) உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், விஷய் பிரிஷிஷன் நிறுவனத்தின் முதுநிலை விற்பனை மேலாளர் ஷிர்வர் ஸ்டீபன் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.**

இச்சந்திப்பின்போது, விஷய் பிரிஷிணன் நிறுவனத்தின் ஷிர்வர் ஸ்டீபன் அவர்கள், சென்னையில் அமைந்துள்ள தங்கள் தயாரிப்பு நிறுவனத்தை விரிவுபடுத்த உள்ளதாகவும், இதன்மூலம் அதிக அளவில் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், தங்கள் நிறுவனத்தின் விற்பனை அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து தங்கள் நிறுவனத்திற்கு ஆதரவு அளித்து வருவதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசிற்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

**விஸ்டியன் நிறுவனம்**

விஸ்டியன் நிறுவனமானது ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். அமெரிக்க நாட்டின் மிச்சிகனில் உள்ள வான் ப்யூரன் டவுன்ஷிப்பைத் தலைமையிடமாகக் கொண்டு, விஸ்டியன் உலகளவில் 17 நாடுகளில் இயங்கி வருகிறது, இது பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

இது உலகளாவிய வாகன மின்னனுவியல் சப்ளையர் நிறுவனமாகும், இது வாகனங்களின் காக்பிட் அனுபவத்தை மேம்படுத்தும் மின்னணு தயாரிப்புகளை வடிவமைத்தல் மற்றும் தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்றது, இதில் இன்ஸ்ட்ரூமென்ட் கிளஸ்டர்கள், டிஸ்ப்ளேக்கள் மற்றும் இன்ஃபோடெயின்மென்ட் சிஸ்டம்கள் ஆகியவை அடங்கும்.

இந்நிறுவனம் மெக்ஸிகோ, பிரேசில், அர்ஜென்டினா, போர்ச்சுகல், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்லோவாக்கியா, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, துனிசியா, இந்தியா, சீனா, தாய்லாந்து, கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் உற்பத்தி மற்றும் பொறியியல் மையங்களை கொண்டுள்ளது. ஃபோர்டு, ஜென்ரல் மோட்டார்ஸ், BMW மற்றும் Volkswagen போன்ற உலகின் பெரும் வாகன உற்பத்தியாளர்களுக்கு வாகன மின்னனுவியல் பாகங்களை தயாரித்து அளித்து வருகிறது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், விஸ்டியன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 250 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மின்னணு உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், விஸ்டியன் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் சச்சின் லாவண்டே, துணைத் தலைவர் பிரான்சிஸ் கிம், இயக்குநர் ரியான் கசாரி மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.**

**லிங்கன் எலக்ட்ரிக், விஷய் பிரிஷிஷன் மற்றும் விஸ்டியன் ஆகிய நிறுவனங்களுடன் மேற்கொளளப்பட்ட இப்புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக அளவிலான வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.**

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ரூ.2 கோடி நிலத்தை வழங்கிய

# சோழபுரம் ஷாஜஹானுக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, செப். 7-

தஞ்சாவூர் மாவட்டம் சோழபுரம் காவல் நிலையத்திற்காக 2 கோடி ரூபாய் மதிப்பிலான தனது இடத்தை வழங்கிய ஷாஜஹான் அவர்களை பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**"ஈத்துவக்கும் இன்பம்" என வள்ளுவர் குறிப்பிட்டதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழும் ஷாஜஹான் அவர்களின் தன்னலங்கருதா மனதுக்கு எனது பாராட்டுகளும் நன்றியும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## நடப்பாண்டிற்கான

# சித்தா - ஓமியோபதி முதுநிலை படிப்புகளுக்கான சேர்க்கை!

## சென்னை இந்திய மருத்துவம் – ஓமியோபதி இயக்குநரகம் அறிவிப்பு!

சென்னை, செப். 7-

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவ கல்லூரிகளில் உள்ள எம்.டி. (சித்தா) மற்றும் எம்.டி. (யுனானி) மருத்துவ முதுநிலை பட்டப் படிப்புகளுக்கும், சுயநிதி ஓமியோபதி மருத்துவ கல்லூரிகளில் உள்ள எம்.டி. (ஓமியோபதி) மருத்துவ முதுநிலை பட்டப் படிப்புக்கு அரசிற்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள், அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் அனைத்திற்கும், 2024-2025 ஆம் கல்வியாண்டிற்கான சேர்க்கை பெற அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் தகுதியான நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

- விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை "www.tnhealth.tn.gov.in" என்ற சுகாதாரத் துறையின் வலைதள முகவரி மூலமாக தனித்தனியாக ஒவ்வொரு முதுநிலை பட்டப் படிப்பு/பிரிவிற்கும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- விண்ணப்பங்கள் இவ்வியக்குநரகத்திலோ, தேர்வுக்குழு அலுவலகத்திலோ வழங்கப்படமாட்டாது. மேலும், அடிப்படைத்தகுதி, தரவரிசை, கலந்தாய்வு அட்டவணை மற்றும் பிற விவரங்களுக்கு "www.tnhealth.tn.gov.in" என்ற வலைதள முகவரி யில் தெரிந்துக்கொள்ளலாம்.
- விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை 08.09.2024 முதல் 20.09.2024 முடிய மாலை 5.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் தபால் / கூரியர் சேவை வாயிலாக பெறவோ அல்லது நேரில் சமர்ப்பிக்கவோ கடைசி நாள்: 20.09.2024 மாலை 05.30 மணி வரை.
- விண்ணப்பதாரர்கள் எம்.டி. (ஓமியோபதி) மருத்துவ முதுநிலை பட்டப் படிப்புக்கு அரசு ஒதுக்கீட்டு இடங்கள், அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி யாக விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கவேண்டிய முகவரி: "செயலர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை - 600 106."
- தேசியத் தேர்வு முகமையால் நடத்தப்பெறும் முதுநிலை மருத்துவ பட்டப்படிப்புகளுக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு AIAPGET 2024-ல் பெற்ற மதிப்பெண்களின் {எம்.டி. (சித்தா)- AIAPGET (Siddha) - 2024, எம்.டி. (யுனானி)-AIAPGET (Unani) - 2024, மற்றும் எம்.டி. (ஓமியோபதி)- AIAPGET (Homoeopahty) - 2024} அடிப்படையில் சேர்க்கை நடைபெறும்.
- விண்ணப்பதாரர்களுக்கு கலந்தாய்வு நேர்முகமாக மட்டுமே நடைபெறும் மேலும் விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்த செலவிலேயே வரவேண்டும்.
- கலந்தாய்வு தேதி, இடம் மற்றும் அனைத்து விவரங்களும் வலைதள முகவரி மூலமாக மட்டுமே அறிவிக்கப்படும்.
- கலந்தாய்வு அன்று நேரில் வரத்தவறியவர்கள் தங்களது வாய்ப்பை இழந்துவிடுவார்கள்.
- விண்ணப்பக் கட்டணம்:
- எம்.டி. சித்தா இருக்கை
- ஓ.டி. பி.சி., எம்.பி.சி., - டி.என்.சி. பிரிவினருக்கு
- அரசு ஒதுக்கீடு ரூ.3000, எஸ்.சி., எஸ்.சி.ஏ., எஸ்.டி. பிரிவினருக்கு இல்லை.
- எம்.டி. யுனானி அரசு ஒதுக்கீடு ரூ.3000, எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
- ஓமியோபதி) அரசு ஒதுக்கீட்டு இடங்கள் 3,000/- இல்லை
- அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் 1,000/- 1,000/-
- நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் 5,000/- 5,000/-
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணத்தை எஸ்.பி.ஐ. (SBI) e-collect வாயிலாக மட்டுமே செலுத்தவேண்டும்.
- கடைசி தேதிக்குப்பின் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், தபால் / கூரியர் சேவையினால் ஏற்படும் காலதாமதத்திற்கு தேர்வுக்குழு பொறுப்பாகாது.

இவ்வாறு இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை அறிவித்துள்ளது

## அரசுப் பள்ளியில் சர்ச்சைப் பேச்சு!

# சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை!

## பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை, செப். 7-

சென்னையில் அரசுப் பள்ளிக் கூடத்தில் ஆன்மிகப் பேச்சாளர் ஒருவர் தன்னம்பிக்கை உரை என்ற பெயரில் நிகழ்த்திய சொற்பொழிவு சர்ச்சையான நிலையில் இச்சம்பவம் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அரசுப் பள்ளி ஒன்றில் பிரபல ஆன்மிகப் பேச்சாளர் ஒருவர் மாணவிகள் மத்தியில் நிகழ்த்திய சொற்பொழிவும், அதன் நிமித்தமாக அப்பள்ளியின் ஆசிரியர் ஒருவருடன் அந்தப் பேச்சாளர் மேடையில் இருந்தபடியே வாக்குவாதத்தில் ஈடுபட்டதும் குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி சர்ச்சையானது.

இந்நிலையில் நேற்று (செப்.6) காலை சம்பந்தப்பட்ட அரசுப் பள்ளியின் முன்னாள் மாணவர் சங்கத்தினர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில் சம்பந்தப்பட்ட பள்ளியின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள வருகை தந்த தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர், "பள்ளி நிகழ்ச்சியில் சர்ச்சைக்குரிய விதத்தில் பேசிய விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அனைவரின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். யாராக இருந்தாலும் நடவடிக்கை உறுதி. அனைத்து பள்ளிகளுக்கும் பாடமாக இருக்கும் வகையில் அந்த நடவடிக்கை அமையும்" என்றார்.

பின்னர் பள்ளி நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, "பள்ளி மாணவர்கள் சுயமாக சிந்தித்து செயல்பட வேண்டும். உணர்ச்சிப் பெருக்கில் சிக்கிவிடக் கூடாது. அறிவை செலுத்தி சிந்திக்க வேண்டும். கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். மாணவர்கள் ஏன், எதற்கு என்று கேள்வி கேட்க வேண்டும். மதிப்பெண் மட்டுமே புத்திசாலித்தனம் அல்ல; நல்லது, கெட்டது எது என அறிந்து கொள்ளும் பகுத்தறிவு வேண்டும். " என்று அறிவுரை கூறினார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர், "பள்ளிக்குள் யாரை சிறப்பு விருந்தினராக அனுமதிப்பது என்பதில் பள்ளியில் ஆசிரியர்கள் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும்" என்று எச்சரித்தார். ஆன்மிக சொற்பொழிவாளரின் பிற்போக்கு சிந்தனைகளை கேள்வி கேட்ட ஆசிரியர் சங்கரையும் பாராட்டினார்.

முன்னதாக, தமிழக பள்ளிகளில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளை வரைமுறைப்படுத்த புதிய வழிமுறைகளை வகுத்து வெளியிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார். இதனை சமூக வலைதளப் பதிவின் மூலம் தெரிவித்துள்ள முதல்வர் "அறிவியல் வழியே முன்னேற்றத்துக்கான வழி. தனிமனித முன்னேற்றம், அறநெறி சார்ந்து வாழ்தல், சமூக மேம்பாட்டுக்கான சீரிய கருத்துகள்தான் மாணவர்களின் நெஞ்சங்களில் விதைக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தது கவனிக்கத்தக்கது.

இந்நிலையில், சென்னை அசோக்நகர் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் தமிழரசி பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கோவில்பதாகை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரகம் பிறப்பித்துள்ளது.

மேலும், சர்ச்சை சொற்பொழிவு நிகழ்த்திய விவகாரத்தில் விசாரணை நடத்த பள்ளிக் கல்வி இயக்குனர் கண்ணப்பன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## நொய்யல் கால்வாய்க்குட்பட்ட

# பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறப்பு!

சென்னை, செப்.7-

கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், நொய்யல் ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத்திலிருந்து, நொய்யல் கால்வாய்க்குட்பட்ட பாசன நிலங்களுக்கு 09.09.2024 முதல் 07.12.2024 வரையிலான 90 நாட்களில் முறை வைத்து 48 நாட்களுக்கு சிறப்பு நனைப்பிற்கு (Special Wetting) மொத்தம் 414.720 மில்லியன் கன அடிக்கு மிகாமல், தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், கரூர் மாவட்டம், புகளூர் மற்றும் மண்மங்கலம் ஆகிய வட்டங்களிலுள்ள 19480 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

இவ்வாறு நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்ட கழக செயலாளர் நா.கோதண்டன் தலைமையில் நடைபெற்றது.பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், முன்னிலை வகித்தார். ஆர்.சீமான், மு.சா.அரித்குமார், கே.கலா, க.ஹேமந்குமார், டி.விஜயகுமார், ஆர்.வெங்கட், ஆர்.பத்மநாபன், எஸ்.எம்.முருகன், என்.டேனியல், ஆகியோர் வரவேற்றனர். கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர்.உடன் நந்தனம் நம்பிராஜன், ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், குமாரி நாகராஜன் எம்.சி, எம்.எம்.சாமி, டி.ஆர்.தணிகாசலம், சி.மணிகண்டன், கே.முத்தமிழ்செல்வன், என்.பிரேமராசன், எஸ்.கிறிஸ்துராஜ், பிராங்கிளின், வண்ணை மோகன், பா.கோதண்டன், ஜெ.செந்தில்சாமி, மற்றும் பலர் கலந்து கொண்டனர். எம்.எஸ்.ரவி, நன்றி கூறினார்.

## தலைமைக் கழகப் பேச்சாளர்

# வேடசந்தூர் முருகவேல் - இலக்கியா திருமணம்!

## கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. நடத்தி வைத்தார்!

திண்டுக்கல் செப்.7-

கழக தலைமை கழக பேச்சாளர் வேடசந்தூர் முருகவேல் - இலக்கியா இவர்களது திருமணம் வேடசந்தூர் அருகே பூத்தாம்பட்டியில் நடைபெற்றது. இத்திருமணத்தை கழக கொள்கை பரப்பு செயலாளர், திருச்சி சிவா எம்.பி. தலைமையேற்று நடத்தி வைத்தார்.

வேடசந்தூர் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.காந்தி ராஜன் முன்னிலை வகித்தார்.

வேடசந்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் வீரா.எஸ்.டி.சாமிநாதன் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட இளைஞர் அணி து.செயலாளர் கோ.ரவிசங்கர், ஒன்றிய செயலாளர்கள் கவிதா பார்த்திபன், சீனிவாசன், சுப்பையன், பாண்டி, சசி ராஜலிங்கம், ஒன்றிய பெருந்தலைவர் சவுடீஸ்வரி கோவிந்நன், மாவட்ட கவுன்சிலர் கவிதா முருகன்,

வேடசந்தூர் பேரூர் செயலாளர் கார்த்திக், எரியோடு பேரூராட்சி தலைவர் பண்ணை கார்த்திகேயன், ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர்கள் சங்கீதாசீனிவாசன், கு.தமிழ்ச்செல்வி ஆகியோர் வரவேற்பில் நடைபெற்றது இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ, பல்வேறு ஆலோசனைகளை வழங்கி நிர்வாகிகளுக்கு மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை வழங்கினார். அருகில் மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மாநில பிரச்சாரக் குழுச் செயலாளர் சேலம் சுஜாதா, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் சி.ஜெரால்டு, ம.ராஜ், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் பொதுக்குழு உறுப்பினர்கள் ஜி.ராஜேந்திரன், விமல்வர்ஷன், பகுதி கழகச் செயலாளர் பொன் விஜயன், மற்றும் வழக்கறிஞர் வினோத்குமார் மாணவர் அணி வி.தியாகராஜன் உள்பட மகளிர் அணி மாவட்ட தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் சமூக வலைத்தள பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.